செய்தி வெளியீடு எண்: 482 நாள்:– 14.8.2009

# பத்திரிகைச் செய்தி

2009-ற்கு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் தமிழ் நாட்டைச் சார்ந்த புனிதப் பயணிகளுக்கு பல்வேறு மையங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம் நடத்த தமிழ் நாடு மாநில ஹஜ் குழு ஏற்பாடு செய்துள்ளது. இப்புத்தறிவுப் பயிற்சியின்போது சவூதி அரேபியாவில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், பயண விவரங்கள், ஹஜ் பற்றிய வழிமுறைகள், ஹஜ் குழு மற்றும் ஜித்தாவிலுள்ள இந்தியத் துணை தூதரகத்தின் இதர ஏற்பாடுகள், மற்றும் இதர தகவல்கள் பற்றி விரிவாக விளக்கிக் கூறப்படும். இப்பயிற்சி முகாம்கள் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடத்தப்படும்.

2. இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் பின்வருமாறு நடைபெறவுள்ளன:–

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் உள்ளடக்கியவை |
|---|---|---|---|
| 1. | 16–08–2009 ஞாயிற்றுக் கிழமை | முஸ்லிம் அனாதை இல்ல வளாகம், காதிர் நகர், ஹை கிரவுண்ட்ஸ், திருநெல்வேலி–627 011. | திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி |
| 2. | 16–08–2009 ஞாயிற்றுக் கிழமை | மானா மூனா மன்ஜில், 105, மேட்டுப்பட்டி ரோடு, பேகம்பூர், திண்டுக்கல்–624 002. | திண்டுக்கல் மற்றும் தேனீ |
| 3. | 16–08–2009 ஞாயிற்றுக் கிழமை | சென்ட்ரல் மஸ்ஜீத், மண்டபம் மெயின் ரோடு, இரயில்வே ஸ்டேஷன் அருகில், இராமநாதபுரம். | இராமநாதபுரம் |
| 4. | 17–08–2009 திங்கட்கிழமை | வாவு வாஜீஹா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்நோக்கு அரங்கம், திருச்செந்தூர் ரோடு, காயல்பட்டினம். | தூத்துக்குடி |
| 5. | 17–08–2009 திங்கட்கிழமை | மஸ்ஜித் அல்–பிலாஸ் ஜமாத் மசூதி, சுப்ரமணியபிள்ளை தெரு, எஸ்.எஸ். காலனி, மதுரை–16. | மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை |
| 6. | 17–08–2009 திங்கட்கிழமை | அஸீஸியா ஷாதி மகால், அஞ்சுமன் தெரு, வேலூர்-632 004. | வேலூர், மேல்விஷாரம், அரக்கோணம், இராணிப்பேட்டை, வாலாஜாபாத், காட்பாடி, குடியாத்தம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம். |
| 7. | 18–08–2009 | மதரஸே முஃபிதே ஆம் ஹால், | வாணியம்பாடி மற்றும் |

| வ. எண் | நாள் / கிழமை | நடைபெறும் இடம் | மாவட்டங்கள்/இடங்கள் உள்ளடக்கியவை |
|---|---|---|---|
| | செவ்வாய் கிழமை | 1328, நீல்பீல்டு மசூதி தெரு, வாணியம்பாடி -635 751. | திருப்பத்தூர் |
| 8. | 18–08–2009 செவ்வாய் கிழமை | ஹோட்டல் அரிஸ்டோ, டயமண்ட் மஹால், எண்.2, திண்டுக்கல் ரோடு, திருச்சிராப்பள்ளி–620 001. | திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர். |
| 9. | 18–08–2009 செவ்வாய் கிழமை | ஷம்சுல் இஸ்லாம் ஹனஃபி சுன்னத் ஜமாத், திப்பு நகர், சாராமேடு ரோடு, கரும்புக்கடை, கோயம்பத்தூர்–641 008. | கோயம்பத்தூர் மற்றும் நீலகிரி. |
| 10. | 19–08–2009 புதன்கிழமை | ஹாஜியானா அரங்கம், திருநகர் காலனி, ஈரோடு–638 003. | ஈரோடு மற்றும் கரூர் |
| 11. | 19–08–2009 புதன்கிழமை | NMZ விழா அரங்கம், நாகேஸ்வரன் கோயில் தெரு, ஆம்பூர். | ஆம்பூர், பேர்ணாம்பட்டு மற்றும் உம்ராபாத். |
| 12. | 19–08–2009 புதன்கிழமை | K.S.R. மஹால், மஞ்சக்குப்பம், கடலூர். | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 13. | 20–08–2009 வியாழக்கிழமை | ஹஜரத் உமர் (ரலி) கல்வி அறக்கட்டளை எண்.25, சின்ன வாத்தியார் தெரு, தர்மபுரி-636 701. | தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 14. | 20–08–2009 வியாழக்கிழமை | முஸ்லிம் கல்வி அசோசியேஷன், 42/29, சன்னதி தெரு, கோட்டை, சேலம்–636 001. | சேலம் மற்றும் நாமக்கல். |
| 15. | 20–08–2009 வியாழக்கிழமை | ராஜா மஹால், 34 D, திருவிடை மருதூர் ரோடு, கும்பகோணம் (நால் ரோடு அருகில்) | தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம். |

3. ஹஜ்ஜை முறையாக நிறைவேற்ற இப்பயிற்சி முகாம்களில், பெண் புனிதப் பயணிகள் உட்பட அனைத்து ஹஜ் பயணிகளும் அதாவது தேர்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் மட்டும் கலந்துகொள்ளுமாறும், அதன்மூலம் ஹஜ் பயணத்திற்கான விதிமுறைகள், வழிவகைகள் மற்றும் நடைமுறைகளை விரிவாகத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பன்னாட்டு பாஸ்போர்ட்டில் தனியார் ஹஜ் நிறுவனங்கள் மூலம் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள இருப்பவர்களும் தாங்கள் விரும்பினால் இப்புத்தறிவுப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.

**4.** இப்புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துவதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை மாநில ஹஜ் குழு அனுப்பி வைக்க உள்ளது. அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஆலிம்கள் ஹஜ்ஜினை முழுமையாக நிறைவேற்றுவது பற்றிய விளக்கங்கள் அளிப்பார்கள்.

**5.** மேலும், இது குறித்து ஏதேனும் தகவல் ஹஜ் புனிதப் பயணிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி எண்கள்: 044–28252519 மற்றும் 044–28227617).

**உறுப்பினர் (ம) செயல் அலுவலர்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.